2nd copy.

# October 27, 1969 கடிதத்தின் கேள்விகளுக்கான பதில்கள்:-

A 14

Diagram ①




Aயில் உள்ள பெண்ணுக்கு B நபர் சின்னமாமனார் முறையாகிறது. மேலும், அக்கா or தங்கச்சி புருஷனாகிறது. Aயில் உள்ள பெண் B நபரை "மாமா!" என்றுதான் கூப்பிடுவார். மற்றவர்களுடன் பேசும்போது A பெண் B நபரை "எங்க சின்ன மாமனார் நேத்து வந்திருந்தாங்க" "எங்கக்காளை or தங்கச்சியை எங்க சின்னமாமனுக்குத்தான் கொடுத்திருக்கிறது" அப்படி பேசுவாள்.

நீங்கள் வரைந்துள்ள வரைபடத்தில் உள்ளபடி பார்த்தால் A பெண் B நபரை மேற்கண்டபடிதான் முறைவைத்து பேசவேண்டும். ஆனால், தன்னுடைய அக்காளை or தங்கச்சியை B நபர் கல்யாணம் செய்திருப்பதால் "மச்சான்!" என்றும், மற்றவர்களுடன் பேசும்போது "எங்கக்கா ஊட்டுக்காரர்" என்றும், "தங்கச்சி ஊட்டுக்காரர்" என்றும் பேசுவாள்.
ஆனாலும், முக்கியமாக A பெண் B நபரை "மாமா!" என்றும், "எங்க சின்னமாமனார்" என்றுதான் முக்கியம் பேசுவாள்.

---

Diagram ②




குறிப்பு:- A நபருக்கு தான் மணந்துள்ள பெண் சின்னம்மா முறையாகிறது. இந்தமாதிரி கல்யாணம் இங்கு நடைபெறுவதில்லை. பழக்கத்திற்கு மாறாக ஏதாவது நடந்திருக்கலாமோ என்னமோ தெரியவில்லை.

வரைபடத்தில் உள்ள முறைப்படி பார்த்தால் A நபர் கல்யாணத்திற்கு முன் C பெண்ணை "அம்மாயி!" என்ற முறை கொண்டுதான் அழைத்து பேசுவார். ஆனால், சின்னம்மாளையே தான் மணந்து கொண்ட பிறகு முக்கியம் அத்தை! என்ற முறை கொண்டுதான் கூப்பிட வேண்டும். அப்படியில்லாவிட்டால் பொதுவாக "ஆத்தா!" என்று அழைத்துப் பேசுவார். A நபர் D நபரிடம் பேசும்போது கல்யாணத்திற்கு முன் "அப்புச்சி!" என்று அழைத்துப் பேசுவார். கல்யாணமான பிறகு முக்கியமாக "மாமா!" என்ற முறை கொண்டு அழைத்துத்தான் பேசவேண்டும். ஆனால், சின்னம்மாளையே மணந்து கொண்டிருப்பதால் பொதுவாக "அய்யா!" என்று

அழைத்துப் பேசுவார். அப்படிப் பேசலாம். மற்ற மக்களுடன் பேசும்போதும் பொதுவாக "ஊரிலிருந்து எங்கய்ய வந்திருக்-கீங்க, எங்காத்தா வந்திருக்கீங்க" இப்படி முறை கொண்டுதான் பேசுவார் என்று நினைக்கிறேன்.

Diagram ②




குறிப்பு:- நீங்கள் போட்டுள்ள வரைபடத்தில் அக்காள் மகன் தன் தாயாள் மகளையே (சின்னம்மாள் மகளை) கல்யாணம் செய்துள்ளார். இதுமாதிரி கல்யாணம் இங்கு நடைபெறுவதில்லை. தகப்பன் இருவரும் வேறு குலத்தினரை இருந்தாலும் இம்மாதிரி கல்யாணம் நடைபெறாதென்றே நினைக்கிறேன்.

பழக்கத்திற்கு மாறாக அவ்வாறு கல்யாணம் நடந்துவிட்டால் A நபர் B யையும் C யையும் எப்படி முறை ~~சொல்லிக் கொண்டு~~ சொல்லி கூப்பிடுவார்கள் என்றே தெரியவில்லை. கல்யாணம் ஆவதற்கு முன் B பெண்ணையும் C ஆணையும் பெரியம்மா! பெரியப்பா! என்றே அழைத்துப் பேசுவார். அதுதான் முறை. ஆனால், இயற்கைக்கு மாறாக கல்யாணம் நடந்துவிட்டால் A பெண் B யையும், C யையும் அத்தை! மாமா! என்று கூப்பிடுவாளோ என்னமோ தெரியவில்லை. மற்ற மக்களுடன் பேசும் போதும் அப்படித்தான்.